**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.488/2020 இ.ம.எண்.
எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2023ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ஜெயந்தி** | ஜாதி | : |
| த/பெ.பெயர் | : | மதம் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| வட்டம் | : | தொழில் | : |
| மாவட்டம் | : | வயது | : |

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கின் வாதி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டு ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1 26.08.1981 தேதியிட்ட ஈரோடு சார்பு நீதிமன்ற அ.வ.எண்.541/2003 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட சமரச தீர்ப்பாணையின் சான்று நகல் **வா.த.சா.ஆ.1**
2 27.03.2014 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் - சான்று நகல் **வா.த.சா.ஆ.2**
3 27.03.2014 தேதியிட்ட வாதி பெயரிலுள்ள கிரைய ஆவணம் சான்று நகல் **வா.த.சா.ஆ.3**
4 27.05.2020 தேதியிட்ட துய்யம்பூந்துறை அ கிராம ரீ.ச.எண்.510/4பி2, 4ஏ2 காலைக்குண்டான கணினி பட்டா **வா.த.சா.ஆ.4**
5 27.05.2020 தேதியிட்ட துய்யம்பூந்துறை அ கிராம ரீ.ச.எண்.510/4ஏ2 காலைக்குண்டான அ பதிவேடு **வா.த.சா.ஆ.5**

6 09.3.2020 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை நகல் **வா.த.சா.ஆ.6**

7 நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** (பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

8 நீதிமன்ற ஆணையர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** (பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

**வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**